**கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - 2022**

---

கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 3806 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (ஐ) ஆம் உறுப்புரையின் 4.02(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. புகையிரத வலையமைப்பின் வினைத்திறன், நிலைபேறான தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் (அ) முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு வினைத்திறன் (ஆ) வலுப்படுத்தப்பட்ட பராமரிப்பு இயலளவு (இ) முன்னேற்றப்பட்ட புகையிரத பாதுகாப்பு மற்றும் (ஈ) தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் இயலளவு மற்றும் வலுப்படுத்தப்பட்ட எதிர்கால புகையிரத செயற்திட்டங்களின் தயார்படுத்தல் என்பவற்றின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 33,878 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 192 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 28,232 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 160 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,646 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுகின்றது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 செப்தெம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 மே 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானங்கள் | கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் ஊழியர்களின் சம்பளங்களுக்காக எவ்விதமான தொகையையும் பின்னோக்கி நிதியளிப்பின் கீழ் கடனிலிருந்து செலுத்துவதற்கு அல்லது மீள்நிரப்பு செய்வதற்கு அமைச்சரவையின் அமைச்சர்கள் எவ்விதமான அங்கீகாரத்தையும் வழங்கவில்லை. சம்பளம் மற்றும் கொடுப்பனவாக 2019 செப்தெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக மொத்தம் ரூபா. 25.4 மில்லியன் செயற்திட்ட நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காகவும் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நிதியானது சுநுஜீ , நிதிக் குறியீடு – 12 கீழ் கிடைக்கக்கூடியவாறு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் அமைச்சர்களின் அங்கீகாரத்திற்கு அமைவாக கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் ஊழியர்களின் சம்பளங்களுக்காக பின்னோக்கி நிதியுதவியின் கீழ் கடனிலிருந்து ஏதாவது தொகையை செலுத்துவதற்கு அல்லது மீள்நிரப்புவதற்கு அமைச்சரவையின் அமைச்சர்களின் அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

| கூறு ∴உப கூறு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் ரூபா. மில்லியன் | அடைந்து கொள்ளப் பட்ட செயலாற்றல் ரூபா. மில்லியன் | | | |
| -முதலீட்டுக் கிரயம் | 9,484 | 3,493 | "யுஆ் இன் பிரகாரம் மெதுவான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் அவதானிக்கப்பட்டது | கொவிட் 19 பரவல் காரணமாக நிதி அமைச்சினால் அனைத்து செயற்திட்டங்களும் ஐந்து மாதங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டது. தொழிற் சங்க நடவடிக்கையும் பாதிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| -மீண்டெழும் கிரயம் | 9,569 | 337 | | | |
| -நிகழத் தக்கவைகள் | 1,397 | - | | | |
| -அமுல்படுத்தலின் போது நிதி அறவீடு | 491 | 204 | | | |

3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாணந்துறை-வெயாங்கொடை பூர்வாங்க சாத்தியவள ஆய்வின் இறுதி அறிக்கை வரையறுக்கப்பட்ட ஏஜீஎஸ் இன் சர்வதேச∴வளங்கள அபிவிருத்தி ஆலோசனையாளரக்ள் (தனியார்) கம்பனியால் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இது கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்திற்கு 2018 பெப்ரவரி 08 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சாத்தியவள இறுதி அறிக்கையின் அத்தியாயம் 14.2.1 மற்றும் அமுலாக்கல் பட்டியல் அட்டவணையின் 14.1 இன் பிரகாரம், மருதானை லோகோ சந்தி மேம்படுத்தல், தொலைபேசி தொடர்பாடல், நுழைவுச்சீட்டு மற்றும் கட்டண சேகரிப்பு மற்றும் தொழிற்பாட்டு மத்திய நிலைய கட்டட கட்டுமானத்திற்கு முதலாவது முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எனினும், இது செயற்திட்டத்தின் சாத்தியவளக் கற்கைகளுக்கு முரணாக அவதானிக்கப்பட்டது. புதிய வேலைகள் புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் புகையிரத தாமதத்திற்கான பிரதான காரணமாக தெமெட்டக்கொட மற்றும் | சுநுஜீ இன் கீழ் பாடசாலை வீதி பாலத்தின் நிர்மாணத்திற்காக இரு தடைவ விலைமனு கோரப்பட்டது. நிர்மாணத்திலுள்ள சிக்கலான தன்மையில் ஆகக்குறைந்த பங்குபற்றல் இருந்தமையால் இரு சந்தர்ப்பங்களிலும் விலைமனு வெற்றிகரமாக இருந்திருக்கவில்லை. அதேநேரம், ளுடுசு செயற்திட்ட ஒழுங்கமைத்தல் குழு (ளுஊ) கூட்டத்தின் அனுமதியுடன் அவர்களின் இயலளவில் (புழளுடு நிதியங்கள்) பாடசாலை தெரு பாலத்தை புனரமைப்பதற்கு வேண்டப்பட்டது. ஆகையால்,இது செயற்திட்ட நோக்கெல்லையிலிருந்தது. இந்த ஒப்பந்தத்தை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | சாத்தியவள இறுதி அறிக்கை மற்றும் அமைச்சரவை முடிவுகள் மூலம் கவனம் செலுத்தப்பட்ட பிரதான கூறுகளை பூர்த்தியாக்குவதற்கு முதலாவது முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருதானைக்கிடையிலான தடை காரணமாகவிருந்தது. இந்தத் தடையை இல்லாமல் செய்வதற்கு பாடசாலை வீதிப்பாலத்தை (லோகோ சந்தியின் விரிவாக்கம்) நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும், இது செயற்திட்டத்தின் சாத்தியவளக் கற்கைக்கு முரணாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. எனினும் இதுவரை இக்கூறு ஆரம்பிக்கப்படவில்லை. | . | |
| (ஆ) | செயற்திட்டத்தின் மாலபல வீடமைப்பு நிர்மாண ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 05 இல் ரூபா 1,317 மில்லியனிற்காக எம்எஸ்.்.மெஹா பொறியியல் கம்பனிக்கு வழங்கப்பட்டது. இவ் நிர்மாண வேலைகள் தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டமையால் மூல ஒப்பந்த விலையை ரூபா 2,465 மில்லியனிற்கு 87 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் பௌதீக செயன்முறை 27 சதவீதமாகவிருந்ததுடன் ஒப்பந்த திகதியளவில் செயற்திட்டத்தை பூர்த்திசெய்து கையளித்தல் நிச்சயமற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெறுகை காலத்தின் போது கொவிட் - 19 பரவல் மற்றும் நாடு மூடப்பட்டமை ஏற்பட்டமையால் தொழில்நுட்ப மதிப்பீட்டு செய்முறையில் மாத்திரம் காலதாமதம் ஏற்பட்டது. | செயற்திட்டம் எந்தவித காலதாமதமில்லாமல் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆலோசனை உடன்படிக்கையானது ஐனுழுஆ் ஆலோசனை பொறியியல் கட்டிடத் துறையுடன் ளு.யு.ரு (ஸ்பெயின்) ஒப்பந்தக்காரருடன் கண்டியை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்விற்காகவும் விரிவான வடிவமைப்பிற்காகவும் உச்சபட்ச வெளிநாட்டு நாணய தொகை யூரோ 1,385,208 , ஐ.அ.டொ. 2,642,014 மற்றும் உள்நாட்டு நாணய தொகை ரூபா. 194 மில்லியன் கையொப்பமிடப்பட்டது. 2022 திசெம்பர் 31 அளவில் இக்கூறுக்காக மொத்தம் ரூபா. 28 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மற்றும் ஏப்ரல் 2022 இல் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும் செயற்திட்டத்தின் பௌதீக செயன்முறை மெதுவான நிலையிலுள்ளது. | 2020 யூலை 20 இலிருந்து 9 மாதகாலங்களின் பின்னர் ஆலோசனையை தொடங்கிய பின்னர் இலங்னை அரசாங்கத்தின் திறைசேரி தீர்மானத்தால் நிறுத்திவைக்கப்பட்டது. செயற்திட்டம் மீண்டும் 2021 ஏப்ரல் இல் தொடங்கப்பட்டது. அதேநேரம், எஸ்எல்ஆர் ஆனது நோக்கெல்லையில் மாற்றத்தை வேண்டியதுடன் புதிய நோக்கெல்லையை இறுதியாக்குவதற்கு நான்கு மாதங்கள் ஏற்பட்டது. | அனைத்து முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் போது அமைச்சரவை தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதான நிலையத்தில் நெருக்கடியான நேரத்தின் போது நுழைவுச்சீட்டை கொள்வனவு செய்வதற்கான நீண்ட வரிசையை குறைத்துக்கொள்ளும் நோக்குடனும் நுழைவுச்சீட்டுக்களின் இறக்குமதிச் செலவை சேமிக்கும் நோக்குடனும் நுழைவுச்சீட்டு முறைமையை நடைமுறைப்படுத்துவதவற்கு மொத்தம் ரூபா. 4,502 மில்லியன் ஒதுக்கிடப்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டது. எனினும், புகையிரத பாதைகளின் மின்மயலுக்கான அடித்தளம் | எனினும், புதிய ஸ்மாட் நுழைவுச்சீட்டை கொள்வனவு செய்வதற்கான முறைமையானது பல விதங்களில் இலங்கை புகையிரதங்களின் வினைத்திறனை முன்னேற்றுவதுடன் நவீன நுழைவுச்சீட்டை கொள்வனவு செய்வதற்கான முறைமையை வழங்குகின்றது. புதிய முறைமையானது தற்போது | அனுமதிச்சீட்டு முறைமைக்கு முன்பாக புகையிரத பாதைக்குரிய மின்மயலுக்கான அடித்தளம் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைக்கப்படாமல் புகையிரத தொழிற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது. | எதிர்கொள்கின்ற நுழைவுச்சீட்டை கொள்வனவு செய்வதற்கான பிரச்சனைகளுக்கு பதில்களை வழங்குகின்றது. | |
| (உ) | நாடளாவிய ரீதிய தொலைத்தொடர்பாடல் முறைமை செயற்திட்ட கூறினை நிறுவுவதற்காக டயலொக் பிஎல்சி(எஸ்ஆர்ஜ) உடன் 16 நவம்பர் 2020 இல் ஐ.அ.டொ. 9.39 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதிக்கு கைச்சாத்திடப்பட்டது. 2021 திசெம்பர் இல் ஒப்பந்தமானது முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இது 2022 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் உபகரணம் மற்றும் முறையை புகையிரத திணைக்களத்திற்கு 2022 ஓகஸ்ட் 30 அளவில் கையளிக்கப்பட்டிருந்தது. இந்தச் செயற்திட்டத்தின் வேலைகளை மேற்கொள்வதற்கு நிர்வாக முறைமையொன்று அறஜிமுகப்படுத்தப்படாமையால் 2022 திசெம்பர் 31 இறுதியளவில் ரூபா 1,484 மில்லியன் முதலிடப்பட்டிருந்தது. | முடிவுறுத்தப்பட்ட தொலைத்தொடர்பு முறைமை 2022 ஆகஸ்ட் 30 இல் இலங்கை புகையிரத்திற்கு கையளிக்கபட்டிருந்தது. | இலங்கை புகையிரதத்திற்காக உருவாக்கப்பட்ட தொலைத்தொடர்பு முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | புகையிரத நிலைய செயற்பாடு மற்றும் கட்டுப்பாட்டு நிலைய நிர்மாணம் 2019 இல் ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒப்பந்த உடன்படிக்கை 2021 ஒக்தோபர் 05 இல் கைச்சாத்திடப்பட்டது. ரூபா 3,006 மில்லியனால் நிர்மாணத்தில் மூல மதிப்பிடப்பட்ட கிரயம் அதிகரித்தமையால் ஒப்பந்தக்கிரயம் ரூபா 5,331 மில்லியனிற்கு 77 சதவீதத்தால் திருத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட வேலையை ஆரம்பிக்க காலதாமதம் ஏற்பட்டமையால் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அதிகூடிய விலை மாறுபாட்டினை ஏற்படுத்தியமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. 2022 இல் 21 சதவீத உண்மையான பௌதீகச் செயன்முறை திட்டமிடப்பட்ட போதும் உண்மையான பௌதீகச்செயன்முறை 8 சதவீதமாகவிருந்ததுடன் 2024 அளவில் செயற்திட்ட காலப்பகுதி முடிவடைவதால் இந்த நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பான பௌதீகச் செயன்முறை செயற்திட்டக்காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ஆகக்குறைந்த மட்டத்திலிருந்தது. | எல்ஓ இனை வழங்குவதற்கான காலம் மற்றும் 2021 ஒக்தோபர் 05 இல் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கிடையில் நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத பொருளாதார பிரச்சனை ஒட்டுமொத்த நிர்மாணத்தையும் பாதித்தது. | செயற்திட்டமானது காலதாமதமில்லாமல் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |

## 3.3 புறம்பான நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மீளாய்வின் போது செயற்திட்டத்திற்கு பொறுப்புக் கட்டணமாக ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாத ரூபா. 58.7 மில்லியன் மற்றும் ரூபா 139.3 மில்லியன் நிதி காரணமாக ஏற்பட்டிருந்தது. | இலங்கை புகையிரத தொழிற்சங்கமானது செயற்திட்ட நடவடிக்கைகள், மாற்றமடையும் அமைச்சு பதவி, கொவிட்-19 பரவல் சூழ்நிலை, 05 மாதங்களுக்காக திறைசேறியின் அனைத்து செயற்திட்டங்களின் இடைநிறுத்தியமை தொடர்பாக பல்வேறு கவனிப்புக்களை எடுத்துரைத்துள்ளது. | நிதிக் கட்டுப்பாடுகள் பலமாக்கப்பட வேண்டும். |